1979 மார்ச் 22]

மனையிலே ஒரு சம்பவம் நடைபெற்றிருக்கிறது. அந்த தந்தியில், Night duty Hospital Staff assaulted by rowdiesh—Police inactive— Pray immediate intervention—Staff and doctors Mayuram Hospital

என்று வந்திருக்கிறது. அன்புகூர்ந்து, வேறு வழி இல்லாத காரணத்தால், இந்த நேரத்தைப் பயன்படுத்திக் கொண்டு இதைச் சொல்கிறேன். அதற்கு ஆவன செய்ய அரசு முன்வருமா ?

மாண்புமிகு திரு. திருச்சி ஆர். சௌந்திரராஜன் : தலைவர் அவர்களே, தாங்கள் அனுமதி வழங்குவீர்களானால், நான் அதற்கு விடை அளிக்க முற்படுகிறேன். நேற்றையதினம், இது என்னுடைய கவனத்திற்கு கொண்டு வரப்பட்டது. நான் உடனே தொலைபேசி மூலம் தகுந்த அதிகாரிகளோடு தொடர்பு கொண்டு, தகுந்த நடவடிக்கை எடுக்கப்பட்டு, நேற்று முதல் இந்த மருத்துவ மனை ஒழுங்காக செயல்படத் தொடங்கிவிட்டது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

## மருத்துவப் பட்டதாரிகள்

*வினா எண் 518—திரு. செஞ்சி ந. இராமச்சந்திரன் : மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா?

கடந்த 1976–77 ம் ஆண்டுவரை மருத்துவக் கல்வி படிப்பு முடித்து வேலையில்லாத பட்டதாரி டாக்டர்கள் எத்தனை பேர்கள் ?

மாண்புமிகு திரு. திருச்சி ஆர். சௌந்திரராஜன் : தமிழ்நாடு அரசு மருத்துவப் பணியில் உதவி மருத்துவர் பதவிக்கு தற்காலிக நியமனம் வேண்டி 1977 ஆம் ஆண்டு மார்ச் திங்கள் 31 நாள் வரை 2,766 மருத்துவப் பட்டதாரிகள் விண்ணப்பித்துள்ளனர். இவர்கள் தவிர எத்தனை பட்டதாரிகள் வேலையில்லாதிருந்தனர் என்ற விபரம் அரசு அறிய வாய்ப்பில்லை.

திரு. போ. கோபாலன் : இப்படி விண்ணப்ப செய்திருக்கும் மனுதாரர்களுக்கு வேலை வாய்ப்பு எப்போது கொடுக்கப்படும் ?

மாண்புமிகு திரு. திருச்சி ஆர். சௌந்திரராஜன் : தமிழ்நாடு அரசு பணியாளர்கள் தேர்வாணைக் குழுவால் தேர்ந்தெடுக்கப்பட்ட அந்த மருத்துவர்கள் நியமிக்கப்பட்ட பிறகு ஏற்படுகிற காலி இடங்களில் இவர்களை நிரப்ப வழிவகை செய்யப்படும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : முன்வரிசையில் உட்கார்ந்து கொண்டிருக்கும் தலைவர்கள் உட்கார்ந்து கொண்டே பேசக் கூடாது

திரு. க. அன்பழகன் : 2,766 டாக்டர்கள் வேலைக்காகப் பதிவு செய்து கொண்டு வேலை பெறாமல் இரண்டு மூன்று ஆண்டுகளாக இருக்கிறார்கள். இவ்வளவு பேர்களையும் அரசு வேலையில் சேர்ப்பதற்குக் குறைந்தது ஐந்தாண்டுகள் ஆகும். புதிதாக வெற்றி பெற்று வருகிறவர்கள் வந்து கொண்டே இருப்பார்கள். வெளிநாடுகளுக்குச் சென்று மருத்துவர்கள் டணியாற்ற முயற்சிக்கும்போது இந்த அரசு ஏதோ ஒரு முறை அடிப்படையில், கொள்கை அடிப்படையில் அப்பேர்ப்பட்ட அனுமதி வழங்குவதில்லை. அப்படிப்பட்டவர்களை அனுமதித்தால் மற்றவர்களுக்கு வேலை வாய்ப்பு கிடைக்க வாய்ப்பு ஏற்படும். ஆகவே, அதிலே அரசு முறையை மாற்ற முன்வருமா ?

மாண்புமிகு திரு. திருச்சி ஆர். சௌந்திரராஜன் : வெளிநாடுகளில் சென்று மருத்துவர்கள் மருத்துவப் படிப்பு மேற்கொள்வதற்காகவோ மருத்துவப் பணியில் ஈடுபடுவதற்காகவோ கொள்கை அளவில் இந்த அரசு ஒரு முடிவு வைத்திருக்கிறது. அதை நிறைவேற்றுகிறவர்கள் வெளிநாடு செல்ல எந்தவிதமான இடையூறும் இல்லை.

திரு. ரா. கிருஷ்ணன் : பப்ளிக் சர்வீஸ் கமிஷன் மூலமாக டாக்டர்கள் இண்டர்வியூவுக்கு வரவழைக்கப்படுகிறார்கள். அந்த டாக்டர்களில் சிலரை தகுதியில்லாதவர்கள் என்று தேர்வு செய்யப்படாமல் இருக்கிறார்கள். டாக்டர்கள் பட்டம் பெற்றவர்கள் தகுதி இல்லாமல் இருப்பார்களா ? அப்படிப்பட்ட இண்டர்வியூ நடத்துவது முறைதானா? அதைச் சரிப்படுத்த அரசு என்ன செய்ய உத்தேசித்திருக்கிறது ?

மாண்புமிகு திரு. திருச்சி ஆர். சௌந்திரராஜன் : இது நீண்ட காலமாக இருந்து வருகிற முறை.

திரு. சேலம் மு. ஆறுமுகம் : தமிழ் நாடு தேர்வாணைக் குழுவால் ஏராளமான மருத்துவர்கள் தேர்ந்தெடுக்கப்பட்டும் தமிழ் நாட்டில் பல மருத்துவ மனைகளில் டாக்டர்கள் இல்லாமல் இடங்கள் காலியாக இருப்பதை அரசு அறியுமா? கிராமப்புற மருத்துவ மனைகளில் டாக்டர்கள் நியமிக்கப்பட்ட உடன் அவர்கள் உடனடியாக விடுப்பு எடுத்துச் சென்று விடுகிறார்கள் என்பதை அரசு அறியுமா ? எங்கு போட்டாலும் பணியாற்றுவதாகக் கூறும் டாக்டர்களுக்கு உடனடியாக வேலை வாய்ப்பு அளிக்க அரசு முன்வருமா ?

மாண்புமிகு திரு. திருச்சி ஆர். சௌந்திரராஜன் : இப்படிப்பட்ட குறைபாடுகள் ஆங்காங்கு இருப்பது அரசின் கவனத்திற்குக் கொண்டு வரப்பட்டிருக்கிறது. அத்தகைய குறைபாடுகள் நீக்கப்பட வேண்டுமென்று இன்றைக்கு தமிழக முதலமைச்சர் அவர்கள் அதற்கான வழிவகைகளை ஆய்வு செய்து கொண்டிருக்கிறார்கள். இன்றைக்கு தமிழக தேர்வாணைக் குழுவால்

1979 மார்ச் 22]

தேர்ந்தெடுக்கப்படுகிறவர்கள்தான் மருத்துவப் பணியில் நியமிக்கப்பட வேண்டுமென்ற நிலைமை இருந்து கொண்டிருக்கிறது. அவர்கள் பணியில் சேர்ந்த உடனே விடுப்பு எடுத்துக் கொண்டு போகிறார்கள் என்பது உண்மைதான். பல இடங்கள் காலியாக இருக்கின்றன. நீண்ட நாட்களுக்கு முன்னால் தேர்வாணைக் குழுவால் தேர்தெடுக்கப்பட்ட பலர் பணியில் சேரவில்லை. இத்தகைய குறைகளைக் களைவதற்காக இந்த அரசு துரிதமான நடவடிக்கைகளை எடுத்துக் கொண்டிருக்கிறது.

திரு. கூத்தகுடி ச. சண்முகம் : படித்துப் பட்டம் பெற்று வேலை இல்லாத டாக்டர்களுக்கு வேலை கொடுப்பதற்கு குறித்த காலக் கெடுவை இந்த அரசு நிர்ணயிக்குமா ? குறித்த காலக் கெடுவுக்குள் வேலை கொடுக்கவில்லை என்றால் அவர்கள் வெளி நாடுகளில் சென்று வேலை பார்க்க அரசு அனுமதிக்குமா ? அந்த வகையில் அரசின் கொள்கையை மறு பரிசீலனை செய்யுமா ?

மாண்புமிகு திரு. திருச்சி ஆர். சௌந்திரராஜன் : கால அளவை நிர்ணயிப்பது என்பது அவ்வளவு சுலபமான காரியம் அல்ல, வெளிநாடு சென்று படிக்கவோ, பணியில் சேரவோ விரும்புகிறவர்களைப் பொறுத்தவரை இந்த அரசு கொள்கை அளவில் சில வரைமுறைகளை வைத்திருக்கிறது. அதை அவர்கள் நிறைவேற்றுவார்களானால் அவர்கள் சென்று படிப்பதில் எந்தவிதமான தடையும் இல்லை.

திரு. எஸ். ஜே. இராமசாமி : இன்றைக்கு டாக்டர்கள் படித்து விட்டு வந்த பிறகு வரிசைக் கிரமமாக 1971, 1972, 1973 என்று வருஷ வாரியாக அவர்களுக்கு வேலை வாய்ப்பைக் கொடுக்க வேண்டும். ஆனால் செர்வீஸ் கமிஷன் 1978-ல் பாஸ் செய்தவர்களைத் தேர்ந்தெடுத்திருக்கிறது. இதை அரசு கவனத்தில் கொண்டிருக்கிறதா ? ஏன் எப்படி வரிசைக் கிரமத்தை மாற்றி தேர்ந்தெடுக்கப்பட்டிருக்கிறார்கள் என்பதை அரசு ஆராயுமா ?

[முற்பகல் 9-50.]

மாண்புமிகு திரு. திருச்சி ஆர். சௌந்திரராஜன் : தலைவர் அவர்களே, தேர்வாணைக் குழுவில் ஒரு தேர்வு நடக்கிறது. அந்தத் தேர்விலே யார் அதிக மதிப்பெண்கள் பெறுகிறார்களோ அவர்கள் தேர்வாணைக் குழுவால் தேர்ந்தெடுக்கப்படுகிறார்கள் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. ஆர். மணிமாறன் : தலைவர் அவர்களே, இப்படி வேலையில்லாத மருத்துவர்கள் எவ்வளவு காலம் வேண்டுமானாலும் கிராமங்களிலே பணியாற்றுவதற்குத் தயாராக இருக்கிறோம் ன்று அரசுக்குத் தெரிவித்தால் அவர்களுக்கு அரசு ஏதாவது ன்னுரிமை அளிக்குமா ?

[1979 மார்ச் 22

மாண்புமிகு திரு. திருச்சி ஆர். செளந்திரராஜன் : தலைவர் அவர்களே, அப்படித் தொழில் நடத்த விரும்புகிறவர்களுக்கு அரசு உதவி செய்யும் என்று முன்னே அறிவித்திருக்கிறோம். அது மட்டுமல்லாமல் அப்படிப்பட்டவர்களுக்கு வாய்ப்புகள் வழங்க வேண்டுமென்பதைப்பற்றி இந்த அரசு பரிசீலித்துக் கொண்டிருக்கிறது.

திரு. வி. கே. கோதண்டராமன் : மருத்துவக் கல்லூரி மாணவர்கள் படித்து முடித்துவிட்டு வேலையில்லாதவர்கள் வெளி நாடுகளுக்குச் செல்வதாக அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். சந்தோஷம். அப்படி எல்லோருக்கும் கொடுத்துவிட முடியாது ஆகவே சும்மா இருக்கிறவர்களுக்கு பட்ட மேற்படிப்பு என்ற முறையில் எம்.எஸ்., எம்.டி., டி.சி.எம். போன்றவைகளை யார் எல்லாம் படிக்க விரும்புகிறார்களோ அவர்களை எல்லாம் படிக்க வைப்பதற்கு அரசு முன் வருமா ?

மாண்புமிகு திரு. திருச்சி ஆர். செளந்திரராஜன் : தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் சொன்னது போன்ற மேல் பட்டப் படிப்புக்கு எவ்வளவு இடங்கள் என்று குறிக்கப்பட்டு இருக்கின்றன. அதற்காக விண்ணப்பிக்கின்றவர்களைத் தேர்ந்தெடுப்பதற்காக ஒரு குழு இருக்கிறது. அந்தக் குழுவிலே எத்தனை மாணவர்கள் தேர்ந்தெடுக்கப்பட வேண்டுமோ அந்த மாணவர்கள் தேர்ந்தெடுக்கப்படுகிறார்கள். தேர்ந்தெடுக்கப்படுகிறவர்கள்தான் மேற்படிப்புக்குப் படிக்கிறார்கள் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திரு. கோதண்டராமன் தாங்கள் முன்னாலேயே மனுப்போடுகிறீர்களா ? தங்கள் மகள் படிக்கிறாள், அதற்காக இப்போதே மனுப்போடுவது மாதிரி இருக்கிறது.

*வினா எண். 519—டாக்டர் எ. பொன்னுசாமி : மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா —

மருத்துவக் கல்லூரிகளில் சேர்க்கும் மாணவர்களின் எண்ணிக்கையைக் குறைக்கும் எண்ணம் அரசுக்கு உள்ளதா ?

மாண்புமிகு திரு. திருச்சி ஆர். செளந்திரராஜன் : மருத்துவக் கல்லூரிகளில் சேர்க்கும் மாணவர்களின் எண்ணிக்கையைக் குறைக்கும் எண்ணம் தற்போது அரசுக்கு இல்லை.

திரு. ரா. உமாநாத் : தலைவர் அவர்களே, மாண்புமிகு கிட்டப்பா அவர்கள் உங்கள் அனுமதியோடு கேட்டமாதிரி நானும் கேட்கிறேன். உங்கள் அனுமதியோடு அதற்கு பதில் அமைச்சர் சொன்னதுமாதிரி, நான் கேட்கிற கேள்விக்கும் உங்கள் அனுமதியோடு அமைச்சர் பதில் சொல்வார் என்று எதிர்பார்க்கிறேன்.